# ***டாக்டர்.ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு – 9***

## ***2023 - 2024 கல்வி ஆண்டுக்கான ஆண்டு அறிக்கை***

ஈரோடு போற்றும் பண்பாளர்கள்
கல்வித்துறையின் தகைசால் சான்றோர்கள்
சமூகம் போற்றும் சாதனையாளர்கள்
ஊர் போற்றும் உன்னதமானவர்கள்
சிறந்த சிந்தனையாளர்கள்
காலத்தை வென்ற முதலியார் கல்வி
அறக்கட்டளை மூலம் உருவாக்கப்பட்ட

டாக்டர்.ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 2023 - 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆண்டறிக்கையை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் சாதனைச் செம்மல் திரு.கே.கே.பாலுசாமி அவர்களின் சார்பாக சமர்ப்பிப்பதில் பெரும் உவகை கொள்கிறேன்.

நம் கல்லூரியில் 15 இளங்கலை வகுப்புகளும், 2 முதுகலை பட்ட வகுப்புகளும் மற்றும் வணிகவியல் மற்றும் கணினிப்பயன்பாட்டு துறை சார்பாக ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆராய்ச்சித் துறையும் சிறப்பாக செயல்பட்டு மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

கல்லூரிப் புதுப்பொலிவுடன் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய தரமிக்க கல்லூரியாக நமது சாதனைச் செம்மல் திரு.கே.கே.பாலுசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த ஆண்டு மாணவர்களுடைய பங்களிப்பில் வணிகவியல் துறைக்கான ஆய்வுக்கூடத்திற்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்டது.

நம் கல்லூரியில் முதுகலை மற்றும் இளங்கலை மூன்றாம் ஆண்டு எழுதிய 235 மாணவ மாணவிகள் நல்ல மதிப்பெண்களுடன் பட்டம் பெற்றுள்ளனர்.

2023 - 24 ஆம் கல்வி ஆண்டில் 950 மாணவ மாணவிகளுடன் 19.6.2023 அன்று வகுப்புகள் தொடங்கப்பட்டது. அதேபோல் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு 05.7.2023 முதல் வகுப்புகள் தொடங்கப்பட்டது. அன்றைய தினம் Rtn. Major Donor திரு V.S.பாஸ்கரன் வாழ்க்கை திறன் பயிற்சியாளர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு சிறப்புரையாற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் திரு.கே.கே.பாலுசாமி அவர்கள் மற்றும் தி முதலியார் எஜுகேஷனல் டிரஸ்டின் நிர்வாகத்தினர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

தமிழ்ப் பேரவை மற்றும் கல்லூரிப் பேரவை துவக்க விழா 26.07.2023 நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலைமாமணி, பேராசிரியர், பட்டிமன்ற பேச்சாளர், முனைவர் . கு. ஞானசம்பந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

18.12.2023 அன்று ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் இலக்கிய பாசறை வகுப்பில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றனர்.

05.02.2024 அன்று கல்லூரிப் பேரவை சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் கலை உலக பிரபல நட்சத்திர தம்பதிகள் திருமதி.ரேணுகா மற்றும் திரு.குமரன்

அவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு தன்னம்பிக்கை உரையாற்றினர். 26.2.2024 அன்று வேளாளர் கல்லூரியில் நடைபெற்ற Inter Collegiate Meet ல் கணிதத்துறை மாணவர்கள் கலந்து கொண்ட அதில் T. இளங்கோ மூன்றாம் ஆண்டு கணிதவியல் துறை மாணவன் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார்.

29.02.2024 அன்று I Desire Rest என்ற தனிநாடகம், T. இளங்கோ என்ற மூன்றாம் ஆண்டு கணிதவியல் துறை மாணவனால் நடத்தப்பட்டது.

நம் கல்லூரியின் சார்பாக மாணவ மாணவிகள் தமிழர் பண்பாட்டை உணர்த்தும் வகையில் நடத்திய நிகழ்ச்சியில் "கலக்க வாங்க தமிழ் பசங்க" என்னும் விழாவில் சமத்துவம் என்னும் தலைப்பில் நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இதில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விருது வாங்கினார்கள். தமிழ் பேரவையின் சார்பாக 11.9.2023 அன்று பட்டிமன்றம் நடத்தப்பட்டது. இன்றைய மாணவர்களின் வளர்ச்சிக்கு கைபேசி நன்மையா ? தீமையா ? என்னும் தலைப்பில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பட்டிமன்ற விவாதம் நடத்தினர்.

சுதந்திர தின விழாவினை முன்னிட்டு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதை போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பரிசுகளை பெற்றனர்.

11.12.2023 அன்று பாரதியாரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நமது கல்லூரியில் கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டது. பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பாரதியார் பிறந்தநாள் விழாவில் நம் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு கணிதவியல் மாணவிகள் கலந்து கொண்டு இளம் பாரதி விருதுக்கான சான்றிதழ்களை பெற்றனர்.

பாரதிதாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற "Interdisciplinary Approaches in Life Science Research" என்னும் பன்னாட்டு கருத்தரங்கில் Microbiology மாணவ மாணவிகள் கலந்து கொண்டு அதில் D.சுஜிதா ஸ்ரீ மற்றும் K. அனுசியா முதலாமாண்டு மாணவர்கள் Poster Presentation – ல் இரண்டாம் பரிசு பெற்றனர்.

மாணவ மாணவிகளுக்கு துறை சார்ந்த பல்வேறு கருத்தரங்குகள் நடைபெற்றன. இதில் SUBJECTS EXPERTS கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அனைத்து துறைகளிலிருந்தும் மாணவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு INDUSTRIAL VISIT சென்று வந்தனர்.

மேலும் பல்வேறு சமுதாய பணிகளை எங்கள் கல்லூரியின் மாணவர்கள் மேற்கொண்டு சான்றிதழ்களை பெற்றுள்ளனர்.

ஆசிரியர் தின விழா 5.9.2022 அன்று கொண்டாடப்பட்டது. தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் நினைவு கூறும் விதமாக 13.1.2023 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பொங்கல் வைத்து மகிழ்ந்தனர்.

08.3.2023 அன்று பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதில், ROTARY CLUB MEMBER மதுமதி கார்த்திக் மற்றும் தன்னம்பிக்கை பேச்சாளர் நித்தியா சசிகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

கல்லூரிப் பேரவை மற்றும் தமிழ்ப் பேரவை சார்பாக நடத்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் திரு.கே.கே.பாலுசாமி அவர்கள் மற்றும் தி முதலியார் எஜுகேஷனல் டிரஸ்டின் தலைவர் திரு. V.ராஜமாணிக்கம், பொருளாளர் டாக்டர் A. விஜயகுமார் மற்றும் அனைத்து நிர்வாகத்தினர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

ஈரோடு கவிதாலயம் சார்பாக நடைபெற்ற நாட்டியாஞ்சலி நிகழ்வில் நமது கல்லூரியின் மூன்றாம் ஆண்டு BCA மாணவி M.பூமதி அவர்கள் பரதநாட்டியம் அரங்கேற்றம் செய்துள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

நமது கல்லூரியின் YRC மற்றும் RRC சார்பாக 12.08.2023, தேசிய இளைஞர் தினத்தன்று மாணவர்களுக்கான Poster Presentation போட்டி நடத்தப்பட்டது. இதில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். மேலும் 18.08.2023 அன்று மனிதநேய தினத்தையொட்டி எங்களது மாணவ மாணவிகள் முதியோர் இல்லம் சென்று அவர்களுக்கான சேவையை செய்து அவர்களை மகிழ்வித்து வந்தனர்.

22.09.2023 அன்று YRC மற்றும் RRC மாணவ மாணவிகள் ரயில் நகரில் தெரு நாடகத்தின் மூலமாக டெங்கு பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தினார்.

நாட்டு நலத்திட்டத்தின் சார்பாக 26.10.2023 அன்று நமது கல்லூரியில் நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் நமது கல்லூரியும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாமில் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

மேலும் நமது கல்லூரியும் காளிங்கராயன் மருத்துவமனையும் இணைந்து நமது கல்லூரியில் நடத்திய இலவச மருத்துவ பரிசோதனை மூலமாக 305 மாணவ மாணவிகள் பயன்பெற்றனர்.

நாட்டு நலத்திட்டத்தின் சார்பாக இக்கல்வி ஆண்டில் Plastic Free Awareness, Voting Awareness, Drug Abuse Awareness, Dengue Awareness and First-Aid Emergency service awareness போன்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

நமது கல்லூரியின் நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் திரு.R. ரமேஷ் குமார் அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் இருந்து தேர்தல் பணிக்காக BEST NODEL OFFICER என்னும் விருதை பெற்றார்.

B.Com(C.A) முதலாம் ஆண்டு மாணவன் T.திவாகர் 27.01.2024 அன்று Tamil Nadu Fitness Association நடத்திய மாநில அளவிலான Bench Press And Dead Lift Champions போட்டியில் பங்கேற்று 10வது இடம் பெற்றார். மேலும் அவர் 18-02-2024 அன்று உலக உடற்தகுதி கூட்டமைப்பு நடத்திய வலுவான ஆசியா-2024 போட்டியில் 140 கிலோ எடை பிரிவில் 4வது இடமும், 17.03.2024 அன்று Open State level Bench Press and Dead Lift Champions போட்டியில் பங்கேற்ற 145 நபர்களில் 5வது இடத்தைப் பெற்றார்.

24.03.2024 அன்று Tamil Nadu Fitness Association நடத்திய நடத்திய Open South Indian Bench Press and Dead Lift Champions போட்டியில் T.திவாகர் அவர்கள் 150 நபர்களில் 2வது இடத்தைப் பெற்றார்.

05.07.2023 அன்று பஞ்சாபின் LOVELY PROFESSIONAL UNIVERSITY யில் நடைபெற்ற WAYKO INDIA NATIONAL SENIORS AND MASTERS KICK-Boxing சாம்பியன்ஷிப்பில் காளேப் என்னும் வரலாற்று துறை மாணவன் கலந்து கொண்டு மூன்றாவது பரிசை பெற்றுள்ளார். அவர் பாரதியார் பல்கலைக்கழகத்தால் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப்பில் மூன்றாவது பரிசினை பெற்றுள்ளார்.

12.10.2023 அன்று பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான குத்து சண்டை போட்டியில் M. மொஹமது தோபிக் மூன்றாம் பரிசு பெற்றுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் முனைவோர்கான பயிற்சியாக சோப்பு தயாரித்தல், பினாயில் சாக்பீஸ் தயாரித்தல் மற்றும் ஜுவல்லரி தயாரித்தல் ஆகியவை EDC மூலமாக மாணவ மாணவிகளுக்கு கற்றுத் தரப்பட்டு வருகிறது.

நமது கல்லூரியும், ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும் இணைந்து நடத்திய MEGA JOB MELA வில் 200க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டன. இதில் தேர்வு செய்யப்பட்ட 600 பேருக்கு மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்களால் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

9 நிறுவனங்கள் நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் வேலைவாய்ப்பு பெற விரும்பிய இறுதி ஆண்டு படிக்கும் 205 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு அனைரும் 100% வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கல்லூரியில் அனைத்து ஆசிரியர்களும் தங்களை தகுதி வாய்ந்தவர்களாக மேம்படுத்திக் கொண்டு வருகிறார்கள், அதன்படி இந்த கல்வியாண்டில் வணிக நிர்வாகவியல் துறையைச் சேர்ந்த ஆசிரியர் A.திவ்யப்பிரியா P.hD. முடித்துள்ளார். மேலும் பல ஆசிரியர்கள் P.hD. பயின்று வரும் நிலையில் இக்கல்வி ஆண்டிலேயே இன்னும் மூன்று ஆசிரியர்கள் P.hD. முடித்து விடுவார்கள் என்று கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற ஆண்டு நமது கல்லூரி NAAC குழுவால் B+ அங்கீகாரம் பெற்றதை அடுத்து அக்குழுவின் பரிந்துரையின்படி அனைத்து குறைகளையும் கலைந்து A++ பெறுவதற்கான தகுதியுள்ள கல்லூரியாக மாற்றுவதற்கான அனைத்து வேலைகளையும் செய்து இந்த ஆண்டு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் சாதனை செம்மல் திரு.கே.கே. பாலுசாமி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி முதல்வர் தலைமையின் கீழ் NAAC குழுவால் இந்த ஆண்டிற்கான AQAR சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்

மாணவ மாணவிகளுக்கு கல்வியோடு, நற்பண்பும், ஒழுக்கமும், தன்னம்பிக்கையும் கொடுத்து திறமையான குடிமகன்களை உருவாக்கி சமூகத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற மிகப்பெரிய பணியினை டாக்டர்.ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது என்பதை என் சார்பாகவும், என்னை வழிநடத்தி கல்லூரிக்காக கேட்ட நேரத்தில் அனைத்து வசதிகளையும் செய்து தந்துகொண்டிருக்கின்ற எங்கள் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் சாதனை செம்மல் திரு.கே.கே.பாலுசாமி அவர்கள் மற்றும் தி முதலியார் எஜுகேஷன் டிரஸ்டின் தலைவர் திரு. V.ராஜமாணிக்கம், பொருளாளர் டாக்டர் A. விஜயகுமார், மற்றும் அனைத்து நிர்வாகத்தினர் சார்பாகவும் மிக பெருமிதத்தோடு தெரிவித்துக் கொண்டு ஆண்டு அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

***நன்றி வணக்கம்….***